THIRUMATHI JOTHI VENCATACHELLUM: Sir, may I know whether it is a fact that the Government have a nominated Director in the Co-operative Land Development Bank ?

THE HON. THIRU SI. PA. ADITANAR: There are eight different kinds of banks in the co-operative sector. What the hon. Member asks is there a nominated Director in a bank. There are Banks like the State Co-operative Bank, the Land Development Bank and Primary Banks. To which Bank the hon. Member refers?

THIRUMATHI JOTHI VENCATACHELLUM: Sir, may I seek a clarification from the Hon. Minister? Which are the Banks where there are nominated Directors?

THE HON. THIRU SI. PA. ADITANAR: Sir, the Government have power to nominate Directors under Section 27 (2) of the Act and under the bye-laws. The hon. Member can put a specific question. There is no hurry and she can write and send the question to the Hon. Speaker and if admitted, I will answer it.

ஒட்டப்பிடாரத்துக்கு நிலவள வங்கி

* 306 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒட்டப்பிடாரத்தில் ஒரு நிலவள வங்கி திறக்கும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, ஒரு கிளை நிலவள வங்கியை ஒட்டப்பிடாரத்தில் திறக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

திரு. எம். முத்தையா: தலைவரவர்களே, அது எப்பொழுது திறக்கப்படும் என்பதை அமைச்சரவர்கள் கூறுவார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இம்மாத முடிவிற்குள் திறக்கப்படும் என்று எதிர்பார்க்கிறேன். ஏனென்றால் அதற்கான செலவுத் தொகையும் போன வருஷ 1971-72 பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, இந்த நிலவள வங்கி என்று சொல்லப்படுகின்ற வங்கிகள் மூலம் கொடுக்கும் கடன்கள்

[1972 மார்ச் 4

நில அபிவிருத்திக்காக ஒரு விவசாயிக்கு ஒரேயொரு தடவை கொடுக்கப்பட்டு, 20 வருஷங்களில், 7, 8 வருஷங்களில் திருப்பிச் செலுத்த வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் மட்டத்திலும் ஒரு வங்கி திறப்பதனால் லாபகரமாக நடப்பதற்கும், தொடர்ந்து வேலை இருப்பதற்கும் வாய்ப்பில்லாமல் போய் விடுமே, எனவே வட்டத்திற்கு ஒரு வங்கியிருந்தால் போதும் என்ற நிலையைச் சொல்கிறார்களே, அதை அரசு மறு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, கோவில்பட்டியைப் பொறுத்த வரையிலும் வட்டத்திற்கு ஒரு வங்கி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதில் டைரக்டராக இருக்கிறார்களோ இல்லையோ தெரியவில்லை. ஆனால் ஒட்டப் பிடாரத்தில் அவர்கள் கேட்பது தனி கிளை வங்கி. ஒரு வங்கிக்கு கிளைகள் இருக்கும். சென்ட்ரல் பேங்குக்கு 30 கிளைகள் கூட இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒட்டப்பிடாரமா, ஓட்டப் பிடாரமா?

திரு. சொ. காவேரிமணியம் : பேரவைத் தலைவரவர்களே, மதுரை மாவட்டத்திலுள்ள நிலவள வங்கிகளில் சமீபத்தில் சுமார் 6 மாத காலமாகக் கடன் விண்ணப்பங்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஒட்டப்பிடாரம் பற்றிய கேள்வி வினாக்கள் 307, 308, 309 ஆகியவை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளின்படி தள்ளி வைக்கப்படுகின்றன.

சத்தியமங்கலம் காடுகளிலிருந்து சந்தன மரங்கள்

*310 வினா **திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திம்பம், சத்தியமங்கலம் பகுதியில் உள்ள காடுகளில் உள்ள சந்தன மரங்களை மைசூர் மாநிலத்திற்குக் கடத்திச் சென்றதாக யார் மீதேனும் இந்தாண்டு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இல்லை.